ஸ்ரீ ராமஜெயம்

அழகிய அச்சு வேலைகளுக்கு சிறந்த இடம்!

## ஸ்ரீ ராமஜெயம் பிரஸ்




பைண்டிங் வேலைகளுக்கு சிறந்த இடம்!

## மீனு பைண்டிங் ஒர்க்ஸ்

புதுக்கோட்டை.

ஸ்ரீ
மீனாட்சி சுந்தரேசுவரர்
கல்விக் கழகம்
கீழைச்சிவல்பட்டி



மேல் நிலைப்பள்ளி

# ஆய்வுக் கூடக் கட்டிடம்

# திறப்புவிழா

30-8-1984

# பள்ளி வாழ்த்து !

— சுத்தானந்த பாரதியார் —

கலைமகள் அருளினல்
 கனிதமிழ் வளத்தினல்
நிலைபெருந் திருவினல்
 நிலாவுக கலாலயம் ! (கலைமகள்)

ஏட்டுக்கல்வி வீட்டுக்கல்வி
 ஏற்றமாந் தொழிற்கல்வி
நாட்டுக்கல்வி ஓங்கியிங்கு
 நல்லவீரர் வருகவே ! (கலைமகள்)

உடலுறுதி உள்ளுறுதி
 உண்மையான நன்னடை
கடமைகாக்கும் திண்மையோங்கிக்
 கண்மணிகள் வாழ்கவே !
கல்விநிலையம் வாழ்கவே ! (கலைமகள்)

அங்கயற்கண் அம்மையும்
 அழகனும், முருகனும்
மங்கலம் பொலியக் கல்வி
 மன்றம் பொலிக பொலிகவே ! (கலைமகள்)

சிறுமதுரை யூரிலே
 பெருமதுரைச் சங்கம்போல்
அறுவகைச் சமயத்தின்
 அறிவுப்பள்ளி வாழ்கவே ! (கலைமகள்)

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கல்விக் கழகம்

# மணிவிழா அறிக்கை

மேல்நிலைப்பள்ளி ஆய்வுக்கூடக் கட்டிடம்

## -: திறப்புவிழா :-

30—8—1984

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மணிவிழா அறிக்கை | 5 |
| 2. | கல்விக்கழக உறுப்பினர்கள் பட்டியல் | 14 |
| 3. | தொடக்கப்பள்ளி ஆசிரியர் பட்டியல் | 15 |
| 4. | மேல் நிலைப்பள்ளி ஆசிரியர் பட்டியல் | 16 |
| 5. | எம்பள்ளிச் சாதனையாளர் பட்டியல் | 17 |
| 6. | அரசுத் தேர்வுகளில் வெற்றி பெற்றோர் பட்டியல் | 18 |
| 7. | மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி | 19 |






ஸ்ரீ:
மீனாட்சி சுந்தரேசுவரர்
திருமணக் கோலம்

உ

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசர் மேல்நிலைப் பள்ளி, கீழைச்சிவல்பட்டி ஆய்வுக் கூடக் கட்டிடம்

## -: திறப்புவிழா :-

*தலைவர் :*

டாக்டர். **M.A.M. இராமசாமி** அவர்கள்

அண்ணாமலை பல்கலைக்கழக இணைவேந்தர்

*திறப்பாளர் :*

மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர்,

**இராம. வீரப்பன்** அவர்கள்

(செய்தி, அறநிலையத் துறை)

நாள் : 30-8-1984

# எங்கள் நன்றி!



எங்கள் இனிய அன்பிற்குரிய

திரு. **RM. முத்தையா** அவர்கள்

பாடுவார் முத்தப்பர் பிறந்த வூரில்
பாட்டாலே உயர்ந்திட்ட முத்தை யாதான்
ஏடுபுகழ் மீனாட்சி சுந்த ரர்தம்
எழிற்பெயரால் மேனிலைப் பள்ளி கண்டார்
கோடுயர்ந்த கட்டடந்தான் கட்டு தற்குக்
கொடைஞரிடம் பொருள்மிகவே ஈட்டித் தந்தார்
நீடுபுகழ் சிறுமதுரை மாந்தர் தங்கள்
நித்திரையில் கூடத்தாம் மறக்க லாமோ !

— வித்துவான் **அரு. இராமலிங்கனார்,**
துணைத்தலைமை ஆசிரியர்.

உ
சிவமயம்

# மணி விழா அறிக்கை

உலகெல்லாம் காக்கின்ற ஒன்றாம் தெய்வம்
ஒளிப்பிழம்பாம் மீனாட்சி சுந்த ரேசர்
நிலையான பேர்தாங்கும் எங்கள் பள்ளி
நீடுபுகழ் சேர்கல்விக் கழகந் தானும்
மலையாக வளர்ந்தோங்க அறுப தாண்டு
மணிவிழாவின் அறிக்கையினைப் படைப்ப தோடு
கலைமேவும் மேனிலை ஆய்வுக் கூடக்
கட்டிடத்தின் திறப்புவிழாக் காண்போம் வாழ்க

சீரோங்கும் செட்டிநாட்டுச் செம்மல் விழாத்தலைவர் திரு. **இராமசாமி** அவர்களே! பள்ளி ஆய்வுக்கூடத்தைத் திறந்து வைக்க வந்திருக்கின்ற மறம் மாறி அறம் ஓங்கப் பாடுபடும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. **ஆர். எம். வீரப்பன்** அவர்களே! விழாக் காணக் கூடியிருக்கும் நல்லோரே! நங்கையரே! உங்கள் அனைவரையும் வருக வருகவென இருகரம்கூப்பி வரவேற்று அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கல்விக் கழக அறுபதாம் ஆண்டு நிறைவு விழா அறிக்கையினை **அழகப்பன்** செயலர் படிக்கின்றேன்.

## அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கல்விக்கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் தொண்டும்.

*''கல்வி சிறந்த தமிழ்நாடு — புகழ்க்*
*கம்பன் பிறந்த தமிழ்நாடு''* என்பது
மகாகவி பாரதி வாக்கு.

அத்தகைய தமிழ்நாட்டின் ஓர் பகுதியான செட்டிநாட்டில் வாழும் நகரத்தார், திரைகடல் ஓடித் திரவியம் தேடி அறம் பல புரிவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்கள். வாணிகத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தமையால் சிறிதளவு எழுத்தறிவு போதும் என்ற மனப்பான்மையில் இருந்து வந்த

காலம் அது. ஊரெங்கும் திண்ணைப் பள்ளிகளே நடைபெற்று வந்தன. அதனால் 1920-ஆம் ஆண்டிற்கு முன்பு செட்டி நாட்டில் உயர்கல்வி நிலையங்கள் அதிகம் ஏற்படவில்லை.

அருகில் உள்ள காரைக்குடியில் 1913ல் நிறுவப்பெற்ற ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலையும், 1920-ம் ஆண்டு வாக்கில் சிதம்பரத்தில் செட்டிநாட்டரசர் திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு முன்னோடியாகத் துவங்கப் பெற்ற ஸ்ரீ மீனாட்சி கல்லூரியும், நகரத்தார்களிடையே கல்வி பற்றிய ஒரு புத்துணர்ச்சியினை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

ஊர்தோறும் ஒரு பள்ளியை உருவாக்க வேண்டும் என்ற அவா தோன்றியது. இவ்வுணர்வால் உந்தப் பெற்ற திரு **அ. பெரி. பழ. சுப்பிரமணியன் செட்டியார்,** திரு **எ. நா. கா. காசிவிசுவநாதன் செட்டியார்** ஆகிய இருவரும் இவ்வூரில் ஒரு கல்விக் கழகத்தை 1923ல் நிறுவி பல பெரியோர்களின் உதவியால் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கலாசாலை என்ற தமிழ்ப் பள்ளியைத் தோற்று-வித்தனர். துவக்கத்தில் இக் கல்விக் கழகம் பதிவுசெய்யப் பெறாமலேயே இயங்கி வந்தது. விரைவிலேயே 1928-ம் ஆண்டு சூன் திங்களில் இத்தமிழ்ப் பள்ளி அரசின் அங்கீகாரம் பெற்ற உயர் தொடக்கப்பள்ளியாக மாற்றப் பெற்றது.

நாடு விடுதலை பெற்றதும் இவ்வூர் மக்கள் உயர் கல்வியின் அவசியத்தை உணர்ந்து இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க அவாக் கொண்டனர். எனவே 1949-ல் இக்கழகம் அரசு விதிகளின்படி பதிவு செய்யப் பெற்றது. அப்போது கழகத்தின் தலைவராக திரு எ. நா. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்களும், செயலராக திரு மு.அழ.ஆரி.அழ. அழகப்ப செட்டியார் அவர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர் இவ்வூர் நகரத்தார் பெருமக்கள் பலர் இக்கழகத்தின் உறுப்பினர்களாக ஆகி இக்கழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றார்கள். பலருடைய பொருள் உதவியால் 1949ல் ரூபாய் 35,000 வைப்பு நிதியுடன் ஒரு உயர் நிலைப் பள்ளியை இக் கழகத்தார் ஏற்படுத்தினர். 1981ம் ஆண்டு சூலைத் திங்கள் 15ம் நாள் இவ்வுயர்நிலைப் பள்ளி மேலும் ரூபாய் 25,000 வைப்பு நிதியுடன் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப் பெற்றது.



இவ்வாறு இப்பகுதி மக்களுக்கு கல்விப் பணி புரிந்துவரும் இக்கழகம் இன்று தனது அறுபதாம் ஆண்டு நிறைவு நினைவு விழாவினை மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த அறுபதாண்டு காலத்தில் கல்விப் பணிக்காக சுமார் 9 இலட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றோம். தற்பொழுது அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கலாசாலை என்ற பெயரில் ஒரு தொடக்கப் பள்ளியையும், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப் பள்ளியையும், சீரோடும், சிறப்போடும் நடத்தி வருகிறது. இக் கழகத்தின் இன்றைய உயர்விற்கும் பெருமைக்கும் இவ்வூர்ப் பெருமகனார் திரு **இராம. முத்தையா** அவர்கள் ஆற்றிவரும் பணியினை இக்கழகம் என்றென்றும் மறவாது. மென்மேலும் பல்விதத் துறைகளிலும் கல்விக் கூடங்களைத் தோற்றுவிக்க இக்கழகத்திற்கு ஆற்றலை அருள இறைவனை இறைஞ்சுகின்றோம். இவ்வூர் பெருமக்களின் ஆதரவையும் வேண்டுகின்றோம்.

## 2. கல்வி நிலையங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

**தமிழ்ப் பள்ளி :**

1923-ம் ஆண்டு சூன் திங்களில் சுமார் 150 மாணவர்களுடனும் 5 ஆசிரியர்களுடனும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கலாசாலை என்ற தமிழ்ப் பள்ளி, பாடுவார் முத்தப்ப செட்டியார் மடத்தில் தொடங்கப் பெற்றது. முதல் தலைமை ஆசிரியராக யாழ்ப்பாணம் திரு **வை. மு. இரத்னேசுவர ஐயர்** அவர்கள் பணியாற்றினார்கள். தமிழறிஞர், திரு **அ. மு. சரவண முதலியார்** போன்றவர்களின் அரிய சேவையாலும் இப்பள்ளி சிறந்து விளங்கியது.

**உயர் துவக்கப் பள்ளி :**

1928-ல் இத்தமிழ்ப் பள்ளி அரசின் அங்கீகாரம் பெற்ற உயர் துவக்கப் பள்ளியாக மாற்றப் பெற்றது. திரு. *சங்கர நாராயணன்* என்பவர் முதல் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அதன் பின்னர் திருவாளர்கள் **R** *சுப்ரமணிய அய்யரும்*, R. *வெங்கட்ராம அய்யரும்,* **V** *சீனிவாச அய்யரும்* கண்ணும் கருத்துமாய் இப்பள்ளியை நடத்தி வந்தனர். 1942ம் ஆண்டு இப்

பள்ளி நிரந்தர அங்கீகாரம் பெற்றது. 1949ல் உயர்நிலைப் பள்ளி தோன்றியதும் உயர் துவக்கப் பள்ளி, தொடக்கப் பள்ளியாக மாற்றப்பெற்றது. திருவாளர்கள் P. கோவிந்தன், S திருவேங்கடம் ஆகியோர் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிச் சென்றனர். தற்பொழுது திரு K. R. இராமவெங்கடசுப்ரமணியன் தலைமை ஆசிரியராகத் தொடர்ந்து நீண்ட காலமாக இப் பள்ளியை நன் முறையில் நடத்தி வருகிறார்கள். அன்னார் அவர்களுக்கு 1978ல் தமிழ்நாடு அரசு நல்லாசிரியர் விருது அளித்துள்ளது என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இப்பள்ளியில் 276 மாணவர்களும் 227 மாணவியரும் பயின்று வருகின்றனர். 14 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**உயர்நிலைப் பள்ளி :**

1949ம் ஆண்டு சூலை முதல் நாள் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் உயர் நிலைப் பள்ளி துவங்கப் பெற்றது. முதல் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய திரு S. இராகவாச்சாரியாரின் அரிய பணியை நாம் என்றென்றும் நினைவிற்கொள்வோம். அப்பொழுது பயின்றோரின் எண்ணிக்கை 154. பயிற்றுவித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 9 ஆகவும் இருந்தது. இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த திரு V. கோபாலகிருட்டிண அய்யர் திரு உ. சிவராமபிள்ளை ஆகிய இருவரது சேவையை நம்மால் மறக்க இயலாது. அவர்களைத் தொடர்ந்து திரு லெ கண்ணப்பன் அவர்கள் இப்பள்ளியைச் சிறப்புடன் நடத்தி வருகின்றார்கள். 1981ம் ஆண்டு சூன் திங்களில் இப்பள்ளியின் ஆசிரியர் எண்ணிக்கை 20 ஆகவும் மாணவர் எண்ணிக்கை 675 ஆகவும் உயர்ந்திருந்தது இப்பள்ளியின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

**மேல் நிலைப் பள்ளி :**

1981ம் ஆண்டு சூலைத் திங்கள் 15-ஆம் நாள் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப் பெற்றது. 1981 நவம்பர் முதல் நாள் செட்டிநாட்டரசர் இராஜா சர். M. A. முத்தையா செட்டியார் அவர்கள், அப்போதைய கல்வி இயக்குநர் டாக்டர் திரு K. வெங்கடசுப்பிரமணியன, M. A. Ph. D. அவர்கள் தலைமையில் மேல்நிலைப் படிப்புத் துறையினைத் தொடங்கி வைத்தார்கள். தற்பொழுது 29 ஆசிரியர்களையும் 911 மாணவர்களையும் 48 மாணவியர்களையும் கொண்டு எப்பொழுதும் போல் ஆசிரியர்களின் சேவையாலும் மாணவ, மாணவிகளின் ஒத்துழைப்பாலும் இப்பள்ளி சிறப்புற நடைபெற்று வருகிறது.



## 3. கட்டட வளர்ச்சி.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கலாசாலைக் கட்டடம் கட்டுவதற்கு இவ்வூர் திரு அள. மு. உள்ளிட்டார் சுமார் 1¼ எக்கர் இடத்தை இனாமாகத் தந்துதவினார் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். திரு அ. பெரி பழ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள், திரு. எ. நா. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் ஆகிய இருவரும் முன்னின்று பொருள் தந்துதவி, மற்றும் பலருடைய பொருள் உதவியுடன் சுமார் 50,000 ரூபாய் செலவு செய்து அழகியதோர் கட்டிடத்தை எழுப்பினர். அது 4-9-1925ல் திரு க. தெ. நா. தேனப்ப செட்டியார் அவர்களால் திறந்துவைக்கப் பெற்றது. அதன் பின்னர் 1950ல் உயர்நிலைப் பள்ளியானதும் திரு எ. நா. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் முன்னைய கட்டிடத்தின் பின் பகுதியில் இரண்டு வகுப்பறைகளை தம் சொந்தச் செலவிலேயே கட்டித் தந்தார்கள்.

மேலும் வகுப்பறைகளின் தேவை ஏற்பட்டபொழுது 1957ல் இவ்வூர் பெருமக்களாகிய திருவாளர்கள்
நா. கி. வெ. வெள்ளையப்ப செட்டியார்
தெ. மு. கரு சொ. தியாகராசன் செட்டியார்
நா. சொ. கரு. சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோரும் விராமதி க. வெ. கதி. சிகப்பி ஆச்சி வித்தியாசாலையாரும் சிறுகூடற்பட்டி அள. சீனிவாசன் செட்டியார் (அள விசாலாட்சி அறைக்காக) அவர்களும் ஆகிய ஐவரிடமிருந்தும் நன்கொடை பெற்று, அரசு மான்யமும் பெற்று சுமார் ரூபாய் 30,000 செலவு செய்து முந்தைய கட்டிடத்தின் பின் பகுதியில் ஐந்து வகுப்பறைகள் கட்டப்பெற்று அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு திரு கே. காமராஜ் அவர்களால் 1959ல் திறந்து வைக்கப் பெற்றது.

இங்கு வலிவோடும் பொலிவோடும் எழில் கூட்டி நிமிர்ந்து வானளாவி நின்று உங்கள் முன் காட்சியளிக்கும் இக்கட்டிடம் இப்பொழுது திறக்கப்பெறவிருக்கின்றது. இந்த ஆய்வுக் கூடக் கட்டிடம் நமது பெரு மதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய இராம. முத்தையா அவர்களின் அயராத முயற்சியாலும், பல பெரியோர்களின் தாராள நன்கொடையுடனும். அரசு மான்யம் ரூபாய் 75,000 உடனும், சுமார் ஆறுலட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப் பெற்றது.

இவ்வாய்வுக் கூடத்தை, அது அமைவதற்கு உறுதுணையாயிருந்த மதிப்பிற்குரிய இராம. முத்தையா பெயரிட்டே அழைப்பதில் இக்கல்விக் கழகம் பெருமகிழ்வுறுகின்றது

இவ்வாய்வுக் கூடத்திற்கு உபகரணங்கள் வாங்குவதற்கு மேலும் ரூ 25,000 தந்துள்ள தமிழ்நாடு அரசுக்கு இக்கழகம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது

இதனோடு இணைந்த, தற்பொழுதுள்ள ஏழு வகுப்பறைகளையும் கட்டுவதற்கு நன்கொடை தந்துதவிய திருவாளர்கள் 1) அரு.கண அருணாசலம், B Sc ,(Agri) 2) அ பெரி பெரியகருப்பன் செட்டியார் 3) தி. சிவப்பிரகாசம் 4) வ சுப நாச்சியப்பசெட்டியார் 5) உடுமலைப்பேட்டை ஸ்ரீ வெங்கடேசுவரா பேப்பர் மில்ஸ் நிருவாகிகள் 6) இராம மு சோமசுந்தரம் செட்டியார் குடும்பத்தினர் 7) கரு. நடராஜன் — அழகம்மை தம்பதியினர் ஆகியோருக்கு எங்களது உளமார்ந்த நன்றியையும் அன்பான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## 4 பிற வசதிகளின் வளர்ச்சி.

உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டுத் திடல் தேவைப்பட்டபொழுது திரு அள.மு.உள்ளிட்டார் தங்களுக்குச் சொந்தமான சுமார் 5ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைத் தந்து வாடகை ஏதுமின்றி சுமார் 32 ஆண்டு காலம் பள்ளி பயன்படுத்திக்கொள்வதற்குப் பேருதவி புரிந்தார்கள். இதனை நாம் என்றும் மறக்க இயலாது. 1982ல் அவ்விடத்தினை விலைக்கு வாங்கி மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமாக ஆக்கியுள்ளோம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



மாணவர்கட்குக் குடி தண்ணீர் வசதி செய்வதற்காக திரு M. A. M. முத்துராம் அவர்கள், தண்ணீர் இறைக்கும் பொறி அமைத்துத் தந்ததையும், திரு. தி. சிவப்பிரகாசம் அவர்கள் பள்ளியில் எல்லா இடங்களிலும் தண்ணீர் விநியோகம் கிடைக்கப் பெறுகின்ற வகையில் குழாய்கள் அமைத்துத் தந்ததையும் இந்நேரத்தில் நன்றியோடு நினைவுபடுத்திக் கொள்கிறோம்.

நிருவாகக்குழு உறுப்பினர் திரு S. R. M அழகப்ப செட்டியார் அவர்களின் முயற்சியால் கோனாபட்டு திரு. சுபம் தியாகராஜ் அவர்கள் தம் சகோதரியின் நினைவாக ஆண்டுதோறும் S.S.L.C. தேர்வில் நம் பள்ளியில் முதலாவதாக வெற்றிபெறும் மாணவர்க்கு ரூ 101ஐ ''மீனாட்சி நினைவுப் பரிசு'' என்று வழங்க ரூ 1,000ஐ வைப்பு நிதியாக நம் கல்விக்கழகத்திடம் கொடுத்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கீழைச்சிவல்பட்டி மீனாட்சி ரோவர்ஸ் சாரண இயக்கத்தினர் ரூ 1,500ஐ வைப்பு நிதியாகத் தந்து அதிலிருந்து வரும் வருமானத்தை படிப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு பரிசாக வழங்கும்படி செய்துள்ளனர் என்பதனையும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் பள்ளிப் பழைய மாணவன் D. பத்மநாபகுமார் தனக்கு தமிழக அரசு மெரிட் ஸ்காலர்ஷிப்புக்குப் பதிலாக அளித்த ரூபாய் 100ஐ வைப்பு நிதியாகத் தந்து ஆண்டுதோறும் S.S.L.C. தேர்வில் கணக்கியல் பாடத்தில் முதல் மாணாக்கனாகத் தேர்பவனுக்குப் பரிசளிக்க முன்வந்துள்ளதைப் பாராட்டி அவனை வாழ்த்துகின்றோம்.

## 5. பள்ளியின் வளர்ச்சிக்கான சில கோரிக்கைகள்.

இங்ஙனம் வளர்ந்து வரும் நமது பள்ளிகளுக்கு இன்றியமையாத தேவைகளும் பல உள்ளன. அவற்றை எங்கள் கோரிக்கைகளாக இச்சந்தர்ப்பத்தில் உங்கள் முன்வைக்க விரும்புகின்றோம்.

அவையாவன :-

1 துவக்கப் பள்ளிக்கு ஒரு சொந்தக் கட்டிடம்
2 மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டுத் திடலில் ஒரு கேணியும், தண்ணீர் இறைக்கும் பொறியும்

3 மாணவர்கள் சைக்கிள் நிறுத்த ஒரு கொட்டகை
4 மாணவர்கள் பத்திரிக்கை படிப்பதற்கான ஒரு படிப்பகக் கூடம்
5 மாணவிகள் தங்குவதற்கான ஓர் ஓய்வறை
6 கலையரங்கம்
7 விளையாட்டுத் திடல் விஸ்தரிப்பும், விளையாட்டரங்கமும்
8 16 M. M. படக்காட்சி இயந்திரம்
9 தொலைக் காட்சிப் பெட்டி
10 ஓவர்ஹெட் ப்ரொஜெக்டர்
11 டேப்ரிக்கார்டர்
12 கல்விக்குத் தேவையான ஏனைய உபகரணங்கள் முதலியன

மேலே குறிப்பிட்டுள்ளவைகளை வசதியுடைய பெருமக்கள் தாமாகவே முன்வந்து தங்களால் இயன்றதைச் செய்து தர அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

## 6. பாராட்டும் நன்றியும்.

நமது கழகத்தில் அடுத்தடுத்து தலைவராகத் தொண்டாற்றிய திருவாளர்கள் அ. பெரி. பழ. சுப்பிரமணியன் செட்டியார், எ. நா. காசிவிசுவநாதன் செட்டியார், எ. நா. மு. நாராயணன் செட்டியார், எ. நா. கா. அழகப்ப செட்டியார் ஆகியோருக்கு எங்களது பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

நமது கழகத்தில் அடுத்தடுத்து செயலராகப் பணியாற்றிய திருவாளர்கள் மு. அள. ஆரி. அள. அழகப்ப செட்டியார், அள. அ. மு. கரு. காசிவிசுவநாதன் செட்டியார் ஆகியோருக்கும் எங்களது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தற்போது நமது கழகத்தின் தலைவராக உள்ள திரு சித. பெரி. சு. திட்டாணிச் செட்டியார் அவர்களையும் செயலராக உள்ள திரு இராம.பழ. அழகப்ப செட்டியார், B.SC., அவர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

ஆய்வுக்கூடக் கட்டிடக்குழு உறுப்பினர்களான திருவாளர்கள் க. தெ. நா. ராம. தேனப்ப செட்டியார், தெ. மு. கரு. க இராமநாதன் செட்டியார், B.A., கி. அழ. நாராயணன் செட்டியார். மு. இராமசாமிச் செட்டியார் ஆகியோருக்கும் எங்கள் பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

இவ்வாய்வுக்கூடத்தை நிர்மாணித்துத்தந்த "NEW CONSTRUCTION" நிறுவன உரிமையாளர், பொறியியல் வல்லுனர் திரு S. நாச்சியப்பன் அவர்களுக்கு எங்கள் இதயபூர்வமான நன்றி.



கழகத்திற்கு நிதிஉதவி பெற்றுத்தந்த வகையில் பேருதவியாய் இருந்த திருவாளர்கள் M. அழகப்பன், M A., அவர்களுக்கும் V. நாராயணன் B.A., அவர்களுக்கும் இதுசமயம் நன்றிசெலுத்திக் கொள்கிறோம். நன்கொடை கொடுத்து உதவிய எம் பள்ளி பழைய மாணவர்களுக்கும் எங்கள் நன்றி.

கழகத்திற்கு நிதி தேவைப்பட்ட காலங்களில் பொருள் தந்து உதவிய கல்விக்குழு உறுப்பினர்களுக்கும், பி. அழகாபுரி மீனாட்சி கிளப்பிற்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் இரு பள்ளி ஆசிரியர்களுக்கான மாத ஊதியம் முழுமையாகத் தந்து உதவுவதற்கும், பலசந்தர்ப்பங்களில் இப்பள்ளிக்கு கட்டிட மான்யம், தளவாட மான்யம், ஆய்வுக்கூட உபகரண மான்யம் தந்து உதவுவதற்கும், வருகிற செப்டம்பர் 15ம் நாள் முதல் அமலாக்க இருக்கின்ற "முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் எங்கள் பள்ளிக்கு 689 மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கவிருப்பதற்கும் தமிழ்நாடு அரசுக்கு இக்கழகம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

எங்கள் இரு பள்ளிகளிலும் மாணவர்களுக்கு நன்முறையில் ஒழுக்கத்தையும், அறிவையும் புகட்டி வரும் இருபால் ஆசிரியர்கட்கும் எங்களது பாராட்டை உரித்தாக்கிக் கொள்கின்றோம் எங்கள் கல்விக் கழகப் பணிகளைச் சிறந்த முறையில் செயலாற்ற உதவிவரும் திரு AL. முருகப்பன் அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கீழைச்சிவற்பட்டி
30-8-84

இவண்,
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கல்விக்கழகம்

| தலைமை ஆசிரியர்கள் | | பதவிக் காலம் |
|---|---|---|
| துவக்கப்பள்ளி: | 1) திரு P. கோவிந்தன் | 1—7—49 முதல் 17—1—51 |
| | | 1—11—56 முதல் 6—6—57 |
| | 2) ,, S. திருவேங்கடம் | 18—1—51 முதல் 31-10-56 |
| | 3) ,, KR. இராமவெங்கடசுப்ரமணியன் | 7-6-57 முதல் |
| உயர் நிலைப் பள்ளி: | 1) திரு S. இராகவாச்சாரி | 1—7—49 முதல் 16—6—53 |
| | 2) ,, V. கோபாலகிருஷ்ணய்யர் | 1-7-53 முதல் 5-6-60 |
| | 3) ,, உ. சிவராமபிள்ளை | 6-6-60 முதல் 24-10-66 |
| மேல்நிலைப் பள்ளி: | 1) திரு லெ. கண்ணப்பன் | 25—10—66 முதல் ..... |

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கல்விக் கழகம்

## தற்போதைய உறுப்பினர்கள்

### நிர்வாகக் குழு

1. திரு. ST. PR. திட்டாணி செட்டியார் தலைவர்
2. ,, RM. PL அழகப்ப செட்டியார் B. Sc, செயலர்
3. ,, K. T. N. RM. T. தேனப்ப செட்டியார்
4. ,, AL. AM. KR. காசிவிசுவநாதன் செட்டியபர்
5. ,, S. RM. அழகப்ப செட்டியார்
6. ,, RM. முத்தையா B A.
7. ,, T. M. KR. K. இராமநாதன் செட்டியார் B. A.
8. ,, RM. M. SM. முத்தப்ப செட்டியார்
9. ,, E. N. M. N. முத்தையா செட்டியார் B. A.
10. ,, N. S. KR. S. கருப்பையா செட்டியார்
11. ,, AR KN. அருணாசலம் B. Sc. (AGRI)
12. ,, L. கண்ணப்பன் B A.B Ed., தலைமை ஆசிரியர் (Ex. Officio Member

### பொதுக்குழு

1. திரு. M. AL இராமநாதன் செட்டியார்
2. ,, M. CT. கிருட்டினப்ப செட்டியார்
3. ,, N. K. N. K. கிருட்டினப்ப செட்டியார்
4. ,, V. S. வள்ளியப்ப செட்டியார்
5. ,, SV. இராமநாதன் செட்டியார்
6. ,, KR. M KR. கருப்பன் செட்டியார்
7. ,, PR. S. RM. இலக்குமணன் செட்டியார்
8. ,, S. V. V. முத்தரசப்ப செட்டியார்
9. ,, M. முத்துப்பழநியப்ப செட்டியார்
10. ,, S. V. S. அழகப்ப செட்டியார்
11. ,, N. K. V. அழகப்ப செட்டியார்
12. ,, L. முத்தையா செட்டியார்
13. ,, A. PR. S. சுப்பிரமணியன் செட்டியார்
14. ,, PR. PL. இராமசாமி செட்டியார்



15. ,, K. T. N. A. V. T. தேனப்ப செட்டியார்
16. ,, M. அழகப்பன் M. A.,
17. ,, AL. ஆரியப்பன் M. A.,
18. ,, M. AL. SP. AL. SP. சுப்பிரமணியன்
19. ,, T. அழகப்பன் B. Com ,
20. ,, M. இராமசாமி செட்டியார்
21. ,, S. மீனாட்சிசுந்தரம்
22. ,, K. AL நாராயணன் செட்டியார்
23. ,, A. PR. பெரியகருப்பன் செட்டியார்
24. ,, M. S RM. S. AL. சாத்தப்ப செட்டியார்
25. ,, K. T N. A. தேனப்பன்
26. ,, SM. KR. கருப்பன் செட்டியார்
27. ,, T. சிவப்பிரகாசம்
28. ,, PL. S. KR. நடராசன் செட்டியார்
29. ,, VE. PR. வயிரவன் செட்டியார்

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கலாசாலையில்

## தற்பொழுது பணியிலுள்ளோர் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. | KR. இராமவெங்கடசுப்ரமணியன் | தலைமை ஆசிரியர் (தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர்) |
| 2. | ,, | K வெங்கட்டராமன் | இடைநிலை ஆசிரியர் |
| 3. | ,, | S. வெங்கட்டநாராயணன் | இடைநிலை ஆசிரியர் |
| 4. | ,, | P. சுப்பையா | இடைநிலை ஆசிரிரிர் |
| 5. | ,, | AL. அழகப்பன் | இடை நிலை ஆசிரியர் |
| 6. | திருமதி | M. சிவகாமி | இடைநிலை ஆசிரியை |
| 7. | ,, | N. வசந்தாள் | இடைநிலை ஆசிரியை |
| 8. | ,, | M. நாகரெத்தினம் | இளநிலை ஆசிரியை |
| 9. | ,, | K. பத்மாவதி | இளநிலை ஆசிரியை |
| 10. | ,, | S. கனகாம்புஜம் | இளநிலை ஆசிரியை |
| 11. | திரு. | RM. நல்லமுத்தன் | இளநிலை ஆசிரியர் |
| 12. | திருமதி | S. ஜானகி | இளநிலை ஆசிரியை |
| 13. | ,, | V. பாலாமணி | இளநிலை ஆசிரியை |
| 14. | திரு. | VR. செல்லையா | பணியாளர் |

## அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப்பள்ளியில்

### தற்பொழுது பணியாற்றுவோர் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. | L. கண்ணப்பன் B. A; B. Ed. | தலைமை ஆசிரியர் |
| 2. | ,, | வித்துவான் அரு. இராமலிங்கம் | துணைத் தலைமை ஆசிரியர் |
| 3. | ,, | P. முத்துக்குமரன் M. Sc., B. Ed., | முதுகலை கணக்கியல் ஆசிரியர் |
| 4. | ,, | V. இலக்குமணன் M. A., B. Ed | முதுகலை ஆங்கில ஆசிரியர் |
| 5. | ,, | A. M. விமலநாதன் M. A., M. Ed., | முதுகலை பொருளியல் ஆசிரியர் |
| 6. | ,, | P. பகவதியப்பன் M. SC., B. Ed., | முதுகலை தாவரவியல் ஆசிரியர் |
| 7. | ,, | S. மெய்யப்பன் M. A , B. Ed., | முதுகலை தமிழாசிரியர் |
| 8. | ,, | T. சொக்கலிங்கம் M. Com., B. Ed., | முதுகலை வணிகவியல் ஆசிரியர் |
| 9. | ,, | K. காசிராசன் M. SC , B. Ed., | முதுகலை விலங்கியல் ஆசிரியர் |
| 10. | ,, | S. இராமச்சந்திரன் M. SC., | முதுகலை இயற்பியல் ஆசிரியர் |
| 11. | ,, | R. இலக்குமணன் M. SC., | முதுகலை வேதியியல் ஆசிரியர் |
| 12. | ,, | SP. கருப்பையா B. SC , B. T., | கணக்கியல் ஆசிரியர் |
| 13. | ,, | S. இராமசுப்பிரமணியன் M.A ,M Ed., | அறிவியல் ஆசிரியர் |
| 14. | ,, | SP. இராமநாதன் B. SC, B. Ed., | அறிவியல் ஆசிரியர் |
| 15. | ,, | L. கண்ணப்பன் B. SC., B. Ed., | அறிவியல் ஆசிரியர் |
| 16. | ,, | M. விசுவநாதன் B. A , B. Ed., | வரலாற்று ஆசிரியர் |
| 17. | ,, | வித்துவான் த கன்னையா B. A. | தமிழாசிரியர் |
| 18. | ,, | வித்துவான் சி சேது | தமிழாசிரியர் |
| 19 | ,, | V. சேஷாத்திரி | இடைநிலை ஆசிரியர் |
| 20. | ,, | S. மீனாட்சிசுந்தரம் | இடைநிலை ஆசிரியர் |
| 21. | திருமதி | V. இராசலெட்சுமி | இடைநிலை ஆசிரியை |
| 22. | திரு. | S. சின்னக்கருப்பன் | இடைநிலை ஆசிரியர் |
| 23. | திருமதி | V. மீனாட்சி | இடைநிலை ஆசிரியை |
| 24 | திரு | A. அருளாநந்து | இடைநிலை ஆசிரியர் |
| 25. | ,, | S. நாகரெத்தினம் | இடைநிலை ஆசிரியர் |
| 26. | ,, | P. சேது B. A , B. P Ed., | உடற்கல்வி ஆசிரியர் |
| 27. | ,, | KM. முருகப்பன் | உடற்கல்வி ஆசிரியர் |
| 28. | ,, | A. ஆறுமுக நயினார் | நெசவாசிரியர் |
| 29. | ,, | M. ஜெயக்கொடி | ஓவிய ஆசிரியர் |
| 30. | ,, | KS. இராமமூர்த்தி | இளநிலை உதவியாளர் |
| 31. | ,, | N. கருப்பையா | நூலக அலுவலர் |
| 32. | ,, | M. முத்தையா | பணியாளர் |
| 33. | ,, | VR. முத்தையா | காவலர் |



## எட்டாம் வகுப்பு போட்டி பொதுத்தேர்வில் பங்கேற்று திறமை வாய்ந்த கிராமப்புற மாணவர்களுக்கான ஆயிரம் ரூபாய் ( Rs. 1000/- ) தேசிய உபகாரச் சம்பளம் பெற்ற

## எம்பள்ளிச் சாதனையாளர் பட்டியல்

| | கல்வி ஆண்டு | | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 1. | 1972—73 | | D. இராமசுப்பிரமணியன் |
| 2. | 1974—75 | | C. சாத்தப்பன் |
| 3. | 1975—76 | | V. முத்து |
| 4. | 1976—77 | | V. சுப்பிரமணியன் |
| 5. | 1978—79 | | S. முரளி |
| 6. | 1979—80 | | S. மோகன் |
| 7. | 1980—81 | | R. மணிமுத்து |
| 8. | 1981—82 | 1 | S. ஆனந்த் |
| | | 2 | MA. சுந்தரராசன் |

## பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சிப் பட்டியல்

1. 1982—83 முதல்மதிப்பெண் பெற்றவர் :- C. அழகம்மை
சென்றவர் 64 பேர் வெற்றி பெற்றவர் 46 பேர் விழுக்காடு 72 %

2. 1983—84 முதல் மதிப்பெண் பெற்றவர் :- V. கலையரசி
சென்றவர் 56 பேர் வெற்றி பெற்றவர் 45 பேர் விழுக்காடு 80 %

## பள்ளியிறுதி வகுப்பு (S. S. L. C.) தேர்ச்சிப் பட்டியல்

| தொடர் எண் | கல்வி ஆண்டு | சென்றோர் | வென்றோர் | சதவீதம் | முதல் மதிப்பெண் பெற்றவர் |
|---|---|---|---|---|---|
| 1. | 1951—52 | | | 65 | |
| 2. | 1952 53 | | | 64 | |
| 3. | 1953 - 54 | 28 | 20 | 72 | G. சீனிவாசன் |
| 4. | 1954 - 55 | 39 | 23 | 59 | KT. இராமசாமி |
| 5. | 1955 - 56 | 35 | 22 | 63 | K. ஜலாலுதீன் |
| 6. | 1956 57 | 38 | 15 | 39 | R. அரங்கராசன் |
| 7. | 1957 - 58 | | | 66 | A முத்தாறுமுகம் |
| 8. | 1958 - 59 | 39 | 26 | 67 | S மணி |
| 9. | 1959 - 60 | 23 | 8 | 35 | M மங்கையர்க்கரசி |
| 10 | 1960—61 | 37 | 30 | 81 | S வீரராகவன் |
| 11 | 1961 - 62 | 26 | 22 | 85 | M. இராமசாமி |
| 12. | 1962—63 | 64 | 40 | 63 | SP. சிங்காரம் |
| 13. | 1963—64 | 67 | 50 | 75 | VS. கண்ணன் |
| 14 | 1964—65 | 64 | 58 | 91 | RM தண்ணீர்மலை |
| 15. | 1965—66 | 69 | 55 | 80 | K முத்துக்கருப்பன் |
| 16. | 1966 - 67 | 79 | 67 | 85 | T இராசேந்திரன் |
| 17. | 1967—68 | 77 | 73 | 95 | S. கருப்பையா |
| 18. | 1968 69 | 62 | 60 | 97 | MR. அழகப்பன் |
| 19. | 1969—70 | 66 | 58 | 88 | S. கல்யாணசுந்தரம் |
| 20. | 1970—71 | 74 | 68 | 92 | R பாலசுப்பிரமணியன் |
| 21. | 1971 72 | 66 | 61 | 92 | SP கணேசன் |
| 22. | 1972—73 | 68 | 57 | 84 | R. மணிமாறன் |
| 23. | 1973—74 | 74 | 60 | 81 | SP. பழநியப்பன |
| 24 | 1974—75 | 68 | 59 | 87 | MR. மீனாள் |
| 25. | 1975 - 76 | 57 | 56 | 98 | M திருநாவுக்கரசு |
| 26 | 1976—77 | 62 | 59 | 95 | SP. கண்ணப்பன் & V. வைத்தியநாதன் |
| 27 | 1977 - 78 | 69 | 55 | 80 | AM PR. சிதம்பரம் & M. கருப்பையா XI std |
| 28 | 1977—78 | 63 | 45 | 71 | C. சொக்கலிங்கம் x std |
| 29. | 1978 - 79 | 61 | 51 | 84 | S. குமார் |
| 30. | 1979—80 | 66 | 60 | 91 | AS. குமார் |
| 31. | 1980 81 | 76 | 70 | 92 | N. முத்துராமலிங்கம் |
| 32. | 1981—82 | 79 | 59 | 75 | D. பத்மநாபகுமார் |
| 33. | 1982 83 | 71 | 48 | 68 | S. ஆனந்த் |
| 34. | 1983—84 | 89 | 75 | 84 | V. முகில்வண்ணன் |



## -: நினைவாஞ்சலி :-

நமது கல்விக்கழகத்தின் உறுப்பினர்களாக இருந்து பணியாற்றி மறைந்த, பெருமக்களை இவ்வேளையில் நினைந்து அஞ்சலி செலுத்துவது நம் கடமையாகும். அத்தகைய பெருமக்களின் வரிசையை இங்கு நினைவு கொள்வோம்.


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு. | அ. பெரி பழ சுப்பிரமணியன் செட்டியார் | தலைவர் | 1923—1928 |
| 2. | ,, | எ நா. காசிவிசுவநாதன் செட்டியார் | தலைவர் | 1928—1970 |
| 3. | ,, | எ நா. மு நாராயணன் செட்டியார் | தலைவர் | 1970—1977 |
| 4 | ,, | எ நா. கா. அழகப்ப செட்டியார் | தலைவர் | 1977—1981 |
| 5 | ,, | ஆரி அள. அழகப்ப செட்டியார் | செயலர் | 1949 - 1952 |
| 6 | ,, | நா. கி. வெ வெள்ளையன் செட்டியார் | நிர்வாகக்குழு உறுப்பினர் | |
| 7. | ,, | அரு. க கண்ணப்ப செட்டியார் | ,, | ,, |
| 8. | ,, | நா. சொ. கரு. சொக்கலிங்கம் செட்டியார் | ,, | ,, |
| 9. | ,, | மு. ராம ராம சிதம்பரம் செட்டியார் | ,, | ,, |
| 10. | ,, | பழ. மு. சித மு. காசிவிசுவநாதன் செட்டியார் | ,, | ,, |
| 11. | ,, | மு அள. முரு பெரி பெரியகருப்பன் செட்டியார் | பொதுக்குழு உறுப்பினர் | |
| 12 | ,, | மு அள. சுப. அள. சுப்பிரமணியன் செட்டியார் | ,, | ,, |
| 13. | ,, | அ. அழ. சொக்கலிங்கம் செட்டியார் | ,, | ,, |
| 14 | ,, | வ. சுப. சுப்பிரமணியன் செட்டியார் | ,, | ,, |
| 15. | ,, | மு. முப. முத்துப்பழநியப்ப செட்டியார் | ,, | ,, |
| 16. | ,, | க. தெ. ந. தெ. மு. தேனப்ப செட்டியார் | ,, | ,, |
| 17. | ,, | அரு. க. வள்ளியப்ப செட்டியார் | ,, | ,, |
| 18. | ,, | க. தெ. ந. அ. தேனப்ப செட்டியார் | ,, | ,, |
| 19. | ,, | தெ. மு. கரு. சொ. தியாகராசன் செட்டியார் | ,, | ,, |
| 20. | ,, | மு. அரு. காசிவிசுவநாதன் செட்டியார் | ,, | ,, |
| 21. | ,, | கு. ப. அரு. நா. நாராயணன் செட்டியார் | ,, | ,, |
| 22. | ,, | வீர. சேதுராமன் செட்டியார் | ,, | ,, |
| 23. | ,, | சா. பழ. அள. அழகப்ப செட்டியார் | ,, | ,, |
| 24. | ,, | நா. கி. சி. வெ. வெள்ளையன் செட்டியார் | ,, | ,, |
| 25. | ,, | மு. ராம. முத்தையா செட்டியார் | ,, | ,, |
| 26. | ,, | சித. கதிரேசன் செட்டியார் | ,, | ,, |
| 27. | ,, | சுப. மு. சித. முத்தையா செட்டியார் | ,, | ,, |
| 28. | ,, | நா. வயி. நா. நாராயணன் செட்டியார் | ,, | ,, |
| 29. | ,, | அ. வீர. அ. அங்கப்ப செட்டியார் | ,, | ,, |
| 30. | ,, | செ. ப. மு. சுப. சுப்பிரமணியன் செட்டியார் | ,, | ,, |
| 31. | ,, | வி. எஸ். அழகப்ப செட்டியார் | ,, | ,, |

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசர் கலாசாலை கீழைச்சிவற்பட்டி, அளகாபுரி


குரோதன வருடம் ஆவணி மாதம் 20-ம் நாள் 4-9-1925 வெள்ளிக்கிழமை

திருவாளர் க. தெ. நா. தேனப்ப செட்டியாரால் திறந்து வைக்கப்பெற்றது

I



II



புதிய கட்டிடத்தின் மேற்குப் புறத்தோற்றம்